செ.வெ.எண்: 45 நாள்: 16.03.2017

## புதுக்கோட்டை நகராட்சியில் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் புதிய ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை நகராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.03.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

தமிழகஅரசு கோடை காலத்தில் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை நகராட்சி அம்மையாப்பட்டி வெள்ளாறு குடிநீர் நீரேற்று நிலையம், மெகா மின்விசை இறைப்பான், லெட்சுமிநகர் தரைமட்டத்தொட்டி, இராஜகோபாலபுரம் மெகா மின்விசை இறைப்பான் ஆகிய இடங்களில் உள்ள குடிநீர் திட்டப்பணிகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது அம்மையாப்பட்டி வெள்ளாற்றில் புதிய ஆழ்துளை கிணறு அமைக்கவும், கிணறுகளை தூர்வாறவும், மெகா மின்விசை இறைப்பான்களிலிருந்து நகராட்சி குடிநீர் ஊர்தி மூலம் குடிநீரினை நிரப்பி பொதுமக்களுக்கு தடையின்றி வழங்கவும், நகராட்சிகளில் உள்ள அனைத்து மின் மோட்டார்கள் பழுதின்றி சீராக இயங்குவதை உறுதி செய்யவும், மேலும் தேவையான இடங்களில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் புதிய ஆழ்துளை கிணறுகள் அமைக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வில் நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜுவாசுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**